






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி**

**மலர் 1** **இதழ் 50** **10.12.2025**



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

Scanned with OKEN Scanner

# உள்ளே....

## படித்து
## பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்



Scanned with OKEN Scanner

# முத்துக்கள்

ஸ்வாமி தேஸிகன் தமிழில் ஏழு பிரபந்தங்கள் அருளினார்; அவை
1. மும்மணிக்கோவை - முத்து, வைரம், பவழம் ஆகிய மூன்று மணிகளை வரிசையாகக் கோர்த்து மாலை செய்தால் எத்தனை அழகாக இருக்கும்! அதுபோல, மூன்று விதமான பாசுரங்களை வரிசையாக மாற்றிமாற்றி அமைத்து, கோர்வையாக்கி அருளிய நூல் இது; மூன்று மூன்றாக பத்து மூன்று சேர்த்து முப்பது பாசுரங்கள்.
2. நவமணிமாலை - நவரத்னங்களைக் கோர்த்து செய்த மாலை போல, ஒன்பது விதமாக பாக்களைக் கோர்த்து அருளிய நூல்; சொல்லச் சொல்ல செவிக்கு இனிமையானது; பத்து பாசுரங்கள்.
3. பந்துப்பா - பந்தாடும் பெண்டிர் பாடும் பாவகை.
4. கழல்பா - கழல் காய்கள் ஆடும் பெண்டிர் பாடும் பாவகை.
5. அம்மானைப்பா - கும்மியடிக்கும்போது பாடும் பாவகை.
6. ஊசல் பா - ஊஞ்சல் பாட்டு.
7. ஏசல் பா - பிறரை ஏசிப் பெருமானை ஏத்திப் பேசும் பாட்டு.
****************************************************
****************************************************

ஸ்வாமி தேஸிகன் பூர்வாசார்யர்களை நினைத்துக் கொண்டார்;
-குருகையில் வந்து கொழுப்பு அடக்கிய குலபதி நம்மாழ்வார்;
-ஆளவந்தார் என வென்று அருள் தந்து விளங்கிய சீர் ஆளவந்தார்;
-வாரணமாய் வந்து வாதக்கதலிகள் மாய்த்த பிரான் எம்பெருமானார்;
-வாதியர் மன்னு தருக்கச் செருக்கினை அகற்றியருளிய அப்புள்ளார்.
****************************************************
****************************************************

உலகத்திலேயே தாங்க முடியாத துயரம் எது என்று கேட்டுப் பாருங்கள்; பலரிடமிருந்து பலவிதமான பதில் வரும்;
பணம் இழந்ததைச் சொல்லிப் புலம்புவர் பலர்.
உறவு இழந்ததைச் சொல்லி உளறுவார் சிலர்.

Scanned with OKEN Scanner

ஸ்ரீமத்ராமாயணத்திலேயே, மகனைப் பிரிந்த தசரதன் துயரம், கணவனை இழந்த மந்தோதரி துயரம், தனயனை இழந்த ராவணன் துயரம் என்றெல்லாம் பார்க்கிறோம்.

ஆனால், இதெல்லாம் துயரமே இல்லை என பெரியோர்கள் சொல்கின்றனர்; பகவத்-வியோகம்தான் பெருந்துயரமாம்! தாங்கவே முடியாதாம்! மீதியெல்லாம் துயரமே இல்லை என்கின்றனர்.

ஸ்ரீமத்ராமாயணத்திலேயே, இளையபெருமாள் ஸ்ரீலக்ஷ்மணனைப் பாருங்கள்! தந்தை, தாயார், மனைவி என்று எல்லாரையும் பிரிந்தா-லும் கொஞ்சம் கூட கஷ்டமே படவில்லை; பெருமாளுடன் சேர்ந்து கைங்கர்யம் செய்துகொண்டு சுகமாக இருக்கிறார்!
****************************************************
****************************************************

ஸ்ரீஅப்புள்ளார் பற்றிய ஒரு தனியன் ஸ்லோகமும், ஒரு பாசுரமும் தினமும் நாம் சொல்ல ஏற்றவை:

நமோ ராமானுஜார்யாய வேதாந்தார்த்த-ப்ரதாயிநே I
ஆத்ரேய-பத்மநாபார்ய-ஸுதாய குணசாலிநே II

காவலர் எங்கள் கிடாம்பிக் குலபதி அப்புளார்தம்
தேமலர் சேவடி சேர்ந்து பணிந்து, அவர்தம் அருளால்
நாவலரும் தென்வடமொழி நற்பொருள் பெற்ற நம்பி
காவல தூப்புற்குலத்தரசே! எம்மைக் காத்தருளே.
****************************************************
****************************************************

அப்புள்ளார், தம்மிடம் இருந்த பெருஞ்செல்வங்களை ஸ்ரீதேஸிகனிடம் ஒப்படைத்தார்; அவை -

1. எம்பெருமானாரின் திருவடிநிலைகள் (பாதுகைகள்); (திருமடைப்பள்ளி ஆச்சான் வழியாக அப்புள்ளாருக்கு பெரும் நிதியாக கிடைத்தவை; இப்போது ஸ்ரீதேபஸிகன் திருமுடியில் சேவை சாதிக்கின்றன).
2. எம்பெருமானாரின் திருவாழி-திருச்சங்கங்கள்;

(ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு திருவிலச்சினை செய்வித்து அவர்களை உய்ய வைப்பதற்காக ஆசார்யர்கள் சன்னிதியில் திருவாராதனத்தில் இவர்கள் இருப்பர்; அடுத்து வரப்போகும் ஆசார்யர்களுக்கு அவற்றை அருளுவது வழக்கம்; ஸ்வாமி எம்பெருமானார் சந்நிதியில் இருந்த திருவிலச்சினைகள் ஸ்ரீமடைப்பள்ளி ஆச்சான் மூலமாக ஸ்ரீஅப்புள்ளாரிடம் ஏளி இருந்தனர்; இப்போது ஸ்ரீதேஸிகனிடம் வந்து சேர்ந்தனர்).

3. அப்புள்ளார் தாம் எழுதிய மூன்று நூல்கள்.
(ந்யாயகுலிசம் எனும் நூல் மட்டுமே இப்போது கிடைக்கிறது; மேலும் இரு நூல்களை சாதித்ததாக சொல்வார்கள்; இவற்றிலிருந்து ஒன்றிரண்டு ஸ்லோகங்களை ஸ்வாமிதேஸிகன் ஆங்காங்கே எடுத்து சாதிக்கிறார்).

பலநாட்கள் பட்டினி கிடந்து பசியால் பரிதவிப்பவனுக்கு திடீரென்று விருந்துணவு கிடைத்தால் எத்தனை ஆனந்தம் அடைவான்! அத்தனை ஆனந்தத்துடன் ஸ்ரீதேஸிகன் இவற்றைப் பெற்றுக் கொண்டாராம்.
*****************************************************
*****************************************************

பிதாமஹர் பீஷ்மர் பரமபதம் ஏகியபொது பல மஹர்ஷிகள் சென்று சேவித்தனர்; பீஷ்மர் சரதல்பத்தில் படுத்திருந்தார்; அப்போது ஜ்ஞா-னம் படுத்து விட்டது என்று சொன்னார்களாம்; ஆனாலும், அவர் முக்தி பெறும் வைபவத்தைக் காண வந்தார்களாம்; அதுபோல, அப்-புள்ளார் பரமபதம் எழுந்தருளும் வைபவத்தைக் காண ஸ்ரீவைஷ்ண-வர்கள் திரளாக வந்தனர்.
*****************************************************
*****************************************************

ஜ்ஞானாநந்த -மயம் தேவம் நிர்மல-ஸ்படிகாக்ருதிம்!
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹII

ஸ்ரீஹயக்ரீவன் ஜ்ஞானஸ்வரூபன்; ஆனந்த ஸ்வரூபன்; ஜ்ஞானமே ஆனந்தமே வடிவெடுத்த திருமேனி உடையவன்; தூய வெண்பளிங்கு போன்ற திருமேனி உடையவன்; எல்லா கல்விகளுக்கும் ஆதாரமானவன்; அவனி நாங்கள் த்யானம்

Scanned with OKEN Scanner

செய்கிறோம் - என்கிறார்.

'நாங்கள்' என்று நம் போன்றவர்களையும் சேர்த்து ஸ்வாமி தேஸிகன் அருளிச் செய்த அழகே அழகு!

************************************************************
************************************************************

மூன்று திவ்யதேச எம்பெருமான்களும் சேர்ந்து செய்வித்த வைபவம் இது.

1. திருவேங்கடவன் தன் திருமணி மூலம் அவரைப் பிறக்க வழி வகுத்தான்;
2. காஞ்சி பேரருளாளன் தன் ஊரில் பிறக்க வைத்தான்;
3. ஶ்ரீரங்கநாதன் தன் பங்குக்கு ஏதாவது செய்ய நினைத்தானாம்! விஸேஷ-ஜ்ஞானம் அளிப்பதற்காக ஹயக்ரீவனாக வந்து பிறக்-கும்போதே கடாக்ஷம் செய்தானாம்.

அதனால்தான், ஸ்வாமியும் அவர்களை அதற்கேற்ப கொண்டாடுகிறார்
1. 'வேதாந்ததேஸிகனாக என்னை பிறக்க வைத்தவன்'' என்று திருவேங்கடவனைக் குறிப்பிடுகிறார்.
2. அடியிணைக் கீழ் வைத்து அடிமை கொள்வார் என்று பேரருளாளனைப் போற்றினார்; அருளாளர் தாள் நயந்து, சீரான அவனது ஊர்ப்பெருமையைப் பேசினார்; மெய்விரத நன்னிலத்து மேன்மை ஏத்தி வேதாந்தவாசிரியன் விளங்கினானே என்றும் சாதிக்கிறார்.
3. உலகுக்கே ஜ்ஞான- வழி காட்டும் வேதாந்த-ஆசார்யனாக தன்னை அடையாளம் காட்டியவன் அரங்கன் என்று அரங்கனைக் கொண்டாடுகிறார்.

அன்று ஆதியில் ஹயக்ரீவகடாக்ஷம் பெற்ற ஶ்ரீதேஸிகனுக்கு இன்று கிடைத்திருப்பது ஹயக்ரீவமந்த்ரம் ; அதுவும், கருடபகவான் உபதேஸமாக.

.................................................................

Scanned with OKEN Scanner

ஹயக்ரீவபெருமான்தான் எல்லா வித்யைகளுக்கும் நாயகன்.

ஹயக்ரீவனே முழுமுதல் கல்விக் கடவுள்; கல்விக் கடவுள்களாக பெயர் பெற்ற மற்றவர்கள் எல்லாரும் அவனது அருள் பெற்றவர்களே! தக்ஷிணாமூர்த்தி, ஸரஸ்வதிதேவி, தேவகுரு ப்ருஹஸ்பதி, வ்யாஸபகவான் ஆகியவர்கள் உதாஹரணம்.

ஆழ்வார் - ஆசார்யர்களது நாக்குதான் ஹயக்ரீவன் வீற்றிருக்கும் சீரிய சிங்காசனம்; அந்த நாக்கிலிருந்து அவர்கள் சொல்லும் திவ்ய ஸூக்திகள், அந்த குதிரைப் பெருமானின் கனைப்பொலிகள்.

உலகில் யாருக்காவது ஏதாவது ஜ்ஞானம் என்பது துளியும் இருக்குமானால்,அது ஹயக்ரீவனது கருணாகடாக்ஷம்தான்; அதன்றி வேறில்லை.

உலகில், எந்த குழந்தையானது, பிறக்கும்போதே ஹயக்ரீவனது கருணாகடாக்ஷத்தை பெறுகிறதோ, அது அந்த பிறவியிலேயே ஆத்ம ஜ்ஞானம் பெறுகிறது; மோக்ஷம் பற்றிப் பேச ஆரம்பிக்கிறது; உபாயம் செய்து மோக்ஷமும் பெற்று மறுபிறவியை மறுக்கிறது; இது மஹாபாரதம் தெரிவிக்கும் தகவல்.

*****************************************************
*****************************************************

இடைவிடாமல் கருடபகவானையே மனதில் த்யானம் செய்துகொண்டு மந்த்ரஜபம் செய்தார் ஸ்வாமி தேசிகன்; ஸ்ரீமந்நாதமுனிகள் நம்மாழ்வாரை எண்ணி யோகம் செய்ததுபோல அடுத்து நம் ஸம்ப்ரதாயத்தில் நடந்த அத்புதயோகம் இது.

ஸ்ரீகருடபகவானும் அதிவேகமாக ஸ்ரீதேஸிகனிடம் வந்து சேவை கொடுத்தார்.

*****************************************************
*****************************************************

ஸ்ரீதேஸிகன், கருடபகவானின் திருமேனியை சேவித்து சேவித்து வணங்கி வணங்கி ஆனந்தம் அடைந்தார்; கருடனது திருமேனியே வேதமயமாக தெரிகிறது; சிறகுகளில் ஸாமவேதகானம் கேட்கிறது; அங்கங்களில் ஸர்ப்பங்கள் ஆபரணங்களாக

Scanned with OKEN Scanner

மின்னுகின்றன; எதிரிகளுக்கு அச்சம் அளிக்கும் அலகின் கூர்மை அழகின் மேன்மையாக விளங்குகிறது.

ஸ்ரீதேஸிகன் இருகையும் கூப்பியுரைத்த விண்ணப்பம் இது- ''கருடபகவானே, ''ந கச்சித் ஸமஸ்தே நமஸ்தே புனஸ்தே நம : (தேவரீருக்கு சமம் யாரும் கிடையாது; மீண்டும் மீண்டும் தேவரீரை சேவிக்கிறேன்)''.

அனுக்ரஹம் செய்த கருடபகவான் வரங்கள் அளிக்கக் காத்திருந்தார்; ஸ்ரீ தேஸிகனோ வரங்கள் எதையும் விரும்பவில்லை; அவர் மனதால் விரும்பியது இரு விஷயங்கள்தாம் -

1. ''அத்யாத்மவித்யா விதேயா விதேயா: (வேதாந்தவித்யைகள் அடியேனுக்கு வசமாக அருள வேண்டும்)

2. பவத்தாஸ்யம் ஆபாதயேதா தயேதா'' (தேவரீருக்கு தாஸனாக அடியேனை ஆக்கியருள வேண்டும்)'' என.

இது கருடபகவானுக்குத் தெரியும்; அதனால், கருடபகவான் தாமே தேஸிகனுக்கு ஹயக்ரீவமந்த்ரத்தை உபதேஸம் செய்தார். ஹயக்ரீவபெருமான்தான் வேதாந்தங்களின் நாயகன்; அவனது அருளால்தான் வேதாந்தவித்யை விசேஷமாக கைகூடும்.

மேலும் அந்த மந்த்ரத்தை உபதேஸம் செய்ததன் மூலம், கருத்மான் ஸ்ரீதேஸிகனுக்கு ஆசார்யனாக ஆனார்; அதன் மூலம் தேசிகனது இரண்டாவது விருப்பத்தையும் நிறைவேற்றி அருளினார்.

********************************************************
********************************************************

**நன்றி ::அயிந்தை மாநகரில் ---**

**ஸ்ரீ உ.வே.நாவல்பாக்கம் வாசுதேவாசாரியார்**

*********************************************

Scanned with OKEN Scanner